**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.388/2025
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : சண்முகவேல் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : மாடசாமி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவரங்கம் காலனியில் குடியிருந்து பெட்டிக்கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 06.00 மணியளவில் நானும், எனது மச்சான் சத்தியமூர்த்தியும் எனது கடையில் இருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் முதுகுளத்தூர் செல்வி தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோம். எனக்கு லேசான காயம் என்பதால் நான் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன். எனது மச்சானை உள்நோயாளியாக மருத்துவர்கள் சிகிச்சைக்கு அனுமதித்தார்கள். எனது மச்சானுக்கு உதவியாக மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து என்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம்

பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) கடந்த 20.10.2025ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது பெட்டிக்கடையில் இருந்தபோது குட்டிச்சரன் என்பவர் வந்து என்னிடம் வெடிகேட்டபோது நான் இல்லை என்று கூறவும், அவர் சென்றுவிட்டார் என்றாலும், அப்போது எதிரிகள் சத்தியப்பிரியன், பாலா, சந்தோஷ் ஆகிய மூவரும் எனது கடைக்கு வந்து வெடிகேட்டால் கொடுக்கவேண்டியது தானே என்று கூறி மேலும், சில ஆபாச வார்த்தைகளால் என்னை திட்டினார்கள் என்றால் சரியல்ல. நான் அவர்களிடம் இவ்வாறு பேசக்கூடாது என்று கூறியபோது அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றாலும், பிறகு நான் வாடிக்கையாளர்களின் வீட்டிற்கு பால்பாக்கெட் போடுவதற்காக சென்றபோது மாலை 06.00 மணியளவில் எதிரிகள் என்னை வழிமறித்து ஆபாசமாக பேசி கம்பால் அடிக்க வரவும், நான் சத்தம்போட அங்கு வந்த எனது மச்சான் சத்தியமூர்த்தியை எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றாலும், தடுக்க சென்ற என்னையும் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றாலும், எங்களது சத்தம்கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் விடுத்து சென்றதாக புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

STC.No.388/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : சத்தியமூர்த்தி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : ராஜேந்திரன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

26.02.2026

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர்).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் தற்போது கதையன் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மாப்பிள்ளை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். சுமார் 4, 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 06.00 மணியளவில் நானும், அசா.1ம் அசா.1ன் கடையில் இருந்தபோது தெருவில் சுமார் 10, 15 நபர்களுக்கு மேல் கூட்டமாக நின்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது என்னவென்று சென்று பார்த்தபோது கூட்டத்தில் நடந்த நெரிசலில் நாங்கள் கீழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் முதுகுளத்தூர் செல்வி தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டோம். அசா.1க்கு லேசான காயம் என்பதால் அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டார். என்னை உள்நோயாளியாக மருத்துவர்கள் சிகிச்சைக்கு அனுமதித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) கடந்த 20.10.2025ம் தேதி மாலை 05.30 மணியளவில் அசா.1 அவரது பெட்டிக்கடையில் இருந்தபோது குட்டிச்சரன் என்பவர் வந்து அவரிடம் வெடிகேட்டபோது அவர் இல்லை என்று கூறவும், குட்டிச்சரன் சென்றுவிட்டார் என்றாலும், அப்போது எதிரிகள் சத்தியப்பிரியன், பாலா, சந்தோஷ் ஆகிய மூவரும் அசா.1ன் கடைக்கு சென்று வெடிகேட்டால் கொடுக்கவேண்டியது தானே என்று கூறி மேலும், சில ஆபாச வார்த்தைகளால் அவரை திட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அசா.1 அவர்களிடம் இவ்வாறு பேசக்கூடாது என்று கூறியபோது அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றாலும், பிறகு அசா.1 வாடிக்கையாளர்களின் வீட்டிற்கு பால்பாக்கெட் போடுவதற்காக சென்றபோது மாலை 06.00 மணியளவில் எதிரிகள் அசா.1யை வழிமறித்து ஆபாசமாக பேசி கம்பால் அடிக்க வரவும், அவர் சத்தம்போட அங்கு இருந்த நான் தடுக்க சென்றபோது எதிரிகள் என்னை அடித்து காயப்படுத்தினார்கள் என்றாலும், அதைப்பார்த்து தடுக்க வந்த அசா.1யையும் எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றாலும், எங்களது சத்தம்கேட்டு அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் எங்களை கொலைமிரட்டல் விடுத்து சென்றதாக போலிசார் விசாரித்தபோது கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.